கங்கைகொண்டசோழபுரம் வரலாறு

பதிப்பாசிரியர்

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்.பில்., பிஎச்.டி.,

ஆணையர் (பொ)

ஆசிரியர்

முனைவர் **இரா. நாகசாமி**

இயக்குனர் (ஓய்வு)

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை-600 008.

திருவள்ளுவர் ஆண்டு 2043

BIBLIOGRAPHICAL DATA

TITLE	:	**GANGAIKONDACHOLAPURAM VARALARU**
Editor	:	**Dr. S. Vasanthi,** M.A., M.Phil., Ph.d., Commissioner Incharge
Author	:	**Dr. R. Nagasamy** Director (Retd.)
Copy Right	:	Tamilnadu State Dept. of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Edition	:	First
Publication No.	:	259
Year	:	2012
No. of Copies	:	500
Type Point	:	11
No. of Pages	:	91
Paper Used	:	80 Gsm Maplitho
Printer	:	Thirunagar Stationery Articles Rexin and Bell Metal Products Producers Industrial Co-operative Society Ltd, No. 15, Ponnappa Street, Triplicane, Chennai - 5
Publisher	:	State Dept. of Archaeology, Tamil Valarchi Valaagam, Halls Road, Egmore, Chennai - 600 008.
Price	:	Rs. .81/-

உள்ளடக்கம்

வ.எண் பக்கம்

பதிப்புரை

1.	முதல் இராஜேந்திர சோழன்	1
2.	கங்கைகொண்டசோழபுரம்	16
3.	The Temple and the City	44
4.	The City then and now	45
5.	The Temple	49
6.	Epigraphs	75

அட்டைப் படவிளக்கம்

முன் அட்டை : கங்கைகொண்டசோழபுரக் கோயில்

பின் அட்டை : கம்பீரமான நந்தி

அட்டைப்பட வடிவமைப்பு : மு. த. ஸ்ரீதரன்

(முந்நாள் நிழற்படம் எடுப்பவர்)

தொல்லியல் துறை

முனைவர் **சீ. வசந்தி,** எம்.ஏ., எம்பில்., பிஎச்.டி.
ஆணையர் பொறுப்பு

தொல்லியல் துறை
தமிழ் வளர்ச்சி வளாகம்
ஆல்சு சாலை
சென்னை - 600 008
நாள்: 30-11 -2012

பதிப்புரை

அலைகடல் நடுவில் பலகலம் செலுத்தி நாடு பல வென்று இந்திய வரலாற்றில் தனக்கென தனியொரு இடம் பிடித்தவன் முதலாம் இராசேந்திர சோழன் எனில் அது மிகையன்று. தஞ்சையில் இருந்து தலைநகரை கங்கைகொண்ட சோழபுரத்திற்கு மாற்றி ஏறத்தாழ 233 ஆண்டுகள் தொடர்ந்து சோழர் ஆட்சியின் தலைநகராய் விளங்கியது பெருமை மிக்கச் செய்தியாகும்.

அத்தகைய மன்னன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டு விழாவினை போற்றிடும் வண்ணம் "கங்கைகொண்ட சோழபுரம் வரலாறு" என்ற இந்நூலை மறுபதிப்பு செய்து வெளியிட அனுமதி கோரப்பட்டது. அரசின் அனுமதியுடன் விழாத் தொடர்பான கண்காட்சியும், துறை வெளியீடுகளும் வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்நூலுடன் "முதலாம் இராசேந்திரன் செய்திக்கோவை", "அருண்மொழி" என்ற எம்துறை வெளியீட்டில் இருந்து சோழர் காலத்திய அரசியல், சமுதாயம், குறித்த கட்டுரைகள் அடங்கிய "சோழர் சமுதாயம்" என்ற தொகுப்பு நூலும் வெளியிடப்பட உள்ளன.

கங்கைகொண்ட இராசேந்திரன் சோழன் விழா 1982-ஆம் ஆண்டு டிசம்பர் 29, 30 ஆகிய நாட்களில் இத்துறையால் சிறப்பாக கங்கைகொண்ட சோழபுரத்தில் கொண்டாடப்பட்டது. அவ்வமையம் வெளியிடப்பட்ட இவ்வெளியீடு தற்போது மீண்டும் வெளியிடப்படுகிறது.

இந்நூல் வெளிவர நிதி ஒதுக்கித் தந்த **மாண்புமிகு முதல்வர்** அவர்களுக்கும், **மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்** அவர்ககளுக்கும், நம் துறையின் **மாண்புமிகு செயலருக்கும்** முதற்கண் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூலாசிரியர் முனைவர் இரா. நாகசாமி, இயக்குநர்(ஓய்வு), மண்டல உதவி இயக்குநர் திரு. வெ. இராமமூர்த்தி அவர்களுக்கும், இந்நூலை சிறப்பாக அச்சிட்டுத் தந்த அச்சகத்தாருக்கும், எம் துறை அலுவலர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

சி. வசந்தி

முதல் இராஜேந்திர சோழன்

தந்தை	:	இராஜராஜ சோழன்
தாய்	:	வானவன் மாதவி என வழங்கும் திரிபுவன மாதவி
பிறப்பு	:	மார்கழித் திங்கள் திருவாதிரை நட்சத்திரம்
இயற்பெயர்	:	மதுராந்தகன்
பட்டப்பெயர்	:	இராஜேந்திரன்
ஆட்சிக்காலம்	:	கி. பி. 1012 – 1044
மறைவு	:	கி.பி. 1044

இராஜேந்திர சோழனின் சிறப்புப் பெயர்கள்

1. உத்தம சோழன்
2. சோழேந்திர சிம்மன்
3. விக்ரம சோழன்
4. முடிகொண்ட சோழன்
5. பண்டித சோழன்
6. கடாரங்கொண்ட சோழன்
7. கங்கைகொண்ட சோழன்
8. வீர ராஜேந்திரன்
9. பூர்வதேசமும், கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன்
10. அதிசய சோழன்
11. ஜயசிம்ம சிம்ம சரபன்
12. மலைநாடு கொண்டான்
13. மண்ணை கொண்ட சோழன்
14. மகிபால குலகாலன்
15. வீர சோழன்
16. ராஜ ராஜேந்திரன்

17. மதுராந்தகன்
18. இரட்டபாடி கொண்ட சோழன்
19. நிருப திவாகரன்
20. பார்திவேந்திரன்
21. மனுகுல சோழன்
22. ராஜ வித்யாதரன்
23. உதார விடங்கன்
24. தான வினோதன்
25. பராக்கிரம சோழன்

இராஜேந்திர சோழனின் மனைவியர்

1. முக்கோக்கிழானடிகள்
2. அரிந்தவன் மாதேவி
3. வானவன் மாதேவி (அ) திரிபுவன மாதேவி
4. வீரமாதேவி
5. பஞ்சவன் மாதேவி

இராஜேந்திர சோழனின் மக்கள்

பெண் மக்கள்

1. அருமொழி நங்கை
2. அம்மங்கை

ஆண் மக்கள்

1. இராஜாதி ராஜன்
2. இரண்டாம் இராஜேந்திரன்
3. வீர ராஜேந்திரன்
4. சுந்தர சோழ பாண்டியன்
5. விக்கிரம சோழ பாண்டியன்
6. பராக்கிரம சோழ பாண்டியன்
7. மும்முடிச் சோழன்
8. வீர சோழன்
9. மதுராந்தகன்
10. பராந்தக தேவன்

இராஜேந்திரன் காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள்

1. கங்கைகொண்ட சோழபுரம் கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில்
2. கூழம்பந்தல் கங்கைகொண்ட சோழீஸ்வரர் கோயில்
3. திருவொற்றியூர் ஆதிபுரீஸ்வரர் கோயில்
4. திருவலஞ்சுழி பைரவர் கோயில்
5. நாகப்பட்டின் நாகைக்காரோணம்
6. மேல்பாடி அறிஞ்சிகை ஈஸ்வர்ம்
7. அகரம் கைலாசநாதர் கோயில்
8. திருவையாறு தென் கைலாயம்
9. ஆத்தூர் சோமநாதசாமி கோயில்
10. நார்த்தாமலை திருமலைக் கடம்பூர்
11. சேரன்மகாதேவி ராமசாமி கோயில், அம்மளாதேஸ்வரர் கோயில்
12. மாம்பாக்கம் முருகேஸ்வரசாமி கோயில்
13. கங்கைகொண்டான் கைலாசபதி கோயில்
14. சோழபுரம் இராஜராஜீஸ்வரம்
15. செங்குன்றம் ஜெயங்கொண்ட சோழீஸ்வரம்
16. திருப்பத்தூர் அய்யனார் கோயில்
17. இராமநாதன் கோயில் பஞ்சவன் மாதேவீஸ்வரம்
18. கோலார் கோலரம்மா கோயில்
19. பெலத்தூரு பாணேஸ்வரர் கோயில்
20. நத்திகொண்டா மல்லேஸ்வரர் கோயில்
21. சிட்டிபெடா(Sitifata) பைரவர் கோயில்
22. திருமழபாடி வைத்தியநாதசாமி கோயில்
23. மன்னார் கோயில் இராஜகோபாலசாமி கோயில்
24. சாத்தூர் மூலஸ்தான உடையார் கோயில்
25. கொத்தகரே (மைசூர் மாநிலம்) கோயில்

26. மாந்தோட்டம், மாத்தோட்டம் (ஈழம்) சிவன் கோயில்

27. தொட்டமளூர் (சென்னப்பட்டணம், பெங்களூர் மாவட்டம்) கோயில்

28. காவன் தண்டலம் (செங்கை மாவட்டம்) இராஜேந்திர சோழீஸ்வரம்

29. திருவல்லம் திருவையாறு ஈஸ்வரம்

30. அழகாத்ரிபுத்தூர் சூரியன் கோயில்

31. வானமங்கை கைலாசநாதர் கோயில்

32. கன்னியாகுமரி கோனேரீஸ்வரர் கோயில்

இராஜேந்திர சோழன் மெய்க்கீர்த்தி

திருமன்னி வளர இருநில மடந்தையும்
போர்ச்சயப் பாவையுஞ் சீர்த்தனிச் செல்வியுந்
தன்பெருந் தேவியராகி யின்புற
நெடுதிய லூழியுள் இடைதுறை நாடும்
தொடர்வன வேலிப் படர்வன வாசியும்
சுள்ளிச் சூழ்மதிற் கொள்ளிப் பாக்கையும்
நண்ணற் கருமுரண் மண்ணைக் கடக்கமும்
பொருகடல் ஈழத் தரசர்தம் முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவர் வைத்த
சுந்தர முடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழ மண்டலமுழுவதும்
எறிபடைக் கேரளன் முறைமையிற் சூடும்
குலதன மாகிய பலர்புகழ் முடியும்
செங்கதிர் மாலையும் சங்கதிர் வேலைத்
தொல்பெருங் காவற் பல்பழந் தீவும்
செருவிற் கிளவி இருபத் தொருகால்

அரசுகளை கட்டப் பரசுராமன்
மேவரும் சாந்திமத் தீவரண் கருதி
இருத்திய செம்பொன் திருத்தகுமுடியும்
பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டு
ஒளித்த ஜயசிங்கன் அளப்பரும் புகழொடு
பீடியல் இரட்டபாடி ஏழரை
இலக்கமும் நவநிதிக் குலப்பெரு மலைகளும்
விக்ரம வீரர் சக்கர கோட்டமும்
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளையிய நாமனைக் கோணமும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்
பாசடைப் பழன மாசுணி தேசமும்
அயர்வில் வன்கீர்த்தி ஆதிநகர கலையிற்
சந்திரன் தொல்குலத்து இந்திர ரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத்தொடு நிறை குலதனக் குவையும்
சிட்டருஞ் செறிமளை ஒட்ட விஷயமும்
பூசுரர்சேர்நற் கோசல நாடும்
தன்ம பாலனை வெம்முனை யழித்து
வண்டுறை சோலைத் தண்ட புத்தியும்
இரண சூரனை முரணுறத் தாக்கித்
திக்கனை கீர்த்தித் தக்கண லாடமும்
கோவிந்த சந்தன் மாவிழிந் தோடத்
தங்காத சாரல் வங்காள தேசமும்
தொடுகழற் சங்குகோ டடல்மகி பாலனை

வெஞ்சமர் வளாகத்து அஞ்சுனித் தருளி
ஒண்டிறல் யானையும் பெண்டிர் பண்டாரமும்
நித்தில நெடுங்கடல் உத்திர லாடமும்
வெறிமலர்த் தீர்த்தத்து எறிபுனற் கங்கையும்
அலைகடல் நடுவுள் பலகலஞ் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்கவர்ம
னாகிய கடாரத் தரசனை வாகையம்
பொருகடல் கும்பக் கரியொடும் அகப்படுத்து
உரிமையிற் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்
ஆர்த்து அவன் அகநகர்ப் போர்த்தொழில் வாசலில்
விச்சாதிரத் தோரணமும் மொய்ததொளிர்
புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமுந் துறைநீர்ப் பண்ணையும்
வன்மலை ஊரெயிற் றொன்மலை யூரும்
ஆழ்கடல் அகழ் சூழ் மாயிரு டிங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாபப் பாளமும்
காவலம் புரிசை மேவி லிம்பங்கமும்
விளைப் பந்தூருடை வலைப் பந்தூரும்
கலைத் தக்கோர் புகழ் தலைத் தக்கோலமும்
தீதமர் வல்வினை மாதமா லிங்கமும்
கலாமுதில் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்க வார்பொழில் மானக்க வாரமும்
தொடுகடற் காவல் கடுமுரட் கடாரமும்
மாப்பொரு தண்டாற் கொண்ட கோப்பரகேசரி வன்மரான
உடையார் ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்

இராஜேந்திர சோழன் வெற்றிகொண்ட நாடுகள்

1. இடைதுறை நாடு – பம்பாய் மாநிலத்திலுள்ள இரெய்ச்சூர் மாவட்டம்
2. வனவாசி – வானவாசி – மைசூர் மாநிலத்தின் வடமேற்குப் பகுதி
3. கொள்ளிப்பாக்கை – ஹைதராபாத்திற்கு வடகிழக்கில் 45 மைல் தொலைவிலுள்ள குல்பாக்
4. மண்ணைக்கடக்கம் – மான்யகேதம், மால்கெட்
5. ஈழமண்டலம் – இலங்கை
6. பல்பழந்தீவு – மாலத் தீவு
7. சாந்திமத் தீவு – அரபிக்கடற் தீவு
8. முயங்கி – மஸ்கி [நைசாம் இராச்சியம்]
9. இரட்டபாடி ஏழரை இலக்கம் – மேலைச் சாளுக்கிய நாடு இலக்கம்
10. சக்கரக் கோட்டம் – பஸ்தாரிலுள்ள சித்ரகோட்டம்
11. மதுரை மண்டலம் – பஸ்தாரிலுள்ள சித்ரகோட்டம்
12. நாமணைக்கோணம் – ஹைதராபாத்தில் உள்ளது
13. பஞ்சப்பள்ளி – ஹைதராபாத்தில் உள்ளது
14. மாசுனி தேசம் – பாகிஸ்தானில் உள்ளது
15. ஒட்டவிசையம் – ஒரிஸ்ஸா
16. கோசலை நாடு – கோசலம் [மகாநதியின் கரையோரம்]
17. தண்டபுத்தி – வங்காளத்திலுள்ள மிதுன்பூர் மாவட்டம்
18. தக்கணலாடம் – வங்காளத்திலுள்ள ஹுக்ளி, ஹௌரா, மாவட்டங்கள்
19. உத்ரலாடம் மூர்ஷிதாபாத், பீர்பூம் மாவட்டங்கள்

20. வங்காளதேசம் – வங்காளம்

21. கடாரம் – மலேயாவின் மேற்கரையிலுள்ள கெடா

22. சீர்விசயம் – ஸ்ரீ விஜயம் (சுமத்ராவிலுள்ள பாலம்பாங் எனும் இராஜ்யம்)

23. பண்ணை – சுமத்ரா தீவின் கீழ்கரையிலுள்ள ஊர். பனி, பனை என வழங்கப்படுகிறது

24. மலையூர் – மலேயா (அ) சுமத்ரா தீவின் பகுதி

25. இலங்கா சோகம் – மலேயாவிலுள்ள கெடாவிற்குத் தெற்கே உள்ள ஊர்

26. மாயிருடிங்கம் – மலேயாவின் நடுவிலுள்ளது

27. பப்பாளம் – கிரா எனும் பூசந்திக்கு அணித்தாக இருத்தல் வேண்டும்.

28. தக்கோலம் – தகோபா (மலேயா)

29. இலிம்பங்கம் – (மலேயா)

30. வளைப்பந்தூர் – (மலேயா)

31. இலாமுரி தேசம் – வடசுமத்ரா

32. நக்கவாரம் – நிக்கோபார் தீவு

33. தமாலிங்கம் – மலேயாவிலுள்ள தெமலிங் நகரம்

வடக்கே கங்கை கரை வரையிலும், தெற்கே இலங்கை முழுவதும், மேற்கே மேலைக்கடற்கரை முதல் கிழக்கே மலேயா, சிங்கப்பூர், பர்மா, சுமத்ரா, ஜாவா நிக்கோபார் முதலிய நாடுகளை அடிப்படுத்திச் சோழர் தம் வெற்றிக் கொடியான புலிக்கொடி பறக்கவிட்ட மாபெரும் சோழப் பேரரசன்.

இராஜேந்திர சோழனின் சேநாதிபதிகளும், வீரத்தலைவர்களும் அதிகாரிகளும்

1. விக்ரம சோழ சோழியவரையனாகிய அரையன் இராசராசன்
2. கிருஷ்ணன் இராமனான மும்முடிச்சோழ பிரம்மராயன்
3. மாராயன் அருள்மொழியான உத்தமசோழ பிரம்மராயன்
4. ஈராயிரவன் பல்லவாயனான உத்தமசோழப் பல்லவரையன்
5. பாண்டியன் சீவல்லபன்
6. வல்லவரையன் வந்தியத்தேவன்
7. உத்தமசோழ மிலாடுடையார்
8. கங்கைகொண்ட மிலாடுடையார்
9. க்ஷத்ரிய சிகாமணி கொங்காள்வான்
10. தண்டநாயகன் அப்பிமையனாகிய இராஜேந்திர சோழப் பிரம மாராயன்
11. வீரராஜேந்திர பிரம்மாதிராஜன்
12. உத்தம சோழகோன்
13. உத்தம சோழப் பல்லவராயன்
14. முடிகொண்ட சோழ விழுப்பரையன்
15. விக்ரம சோழ சோழியவரையன்
16. இராஜராஜ பிரம்மராயன்
17. பாண்டி உதய திவாகரன் இராஜராஜ நல்லூருடையான்
18. நீலன் வெண்காடன் என்ற இராஜராஜ மூவேந்த வேளான்
19. சேனாபதி மதுராந்தகன் பரகேசரி மூவேந்த வேளான்
20. கொடும்பாலூர் இராஜேந்திரசோழ இருக்குவேளார்

21. சேனாபதி அரையன் கிடாரங்கொண்ட சோழன் இராஜராஜ அணிமுரி நாடாழ்வான்

22. இராஜேந்திர சோழ பிரம்மராயர்

23. கங்கைகொண்ட சோழப் பல்லவரையன்

24. வில்லவராஜன்

25. இராஜராஜ குமண ராஜன்

26. இராஜராஜ மூவேந்த வேளான்

27. குணநிதி அருமொழி மூவேந்த வேளான்

28. விக்ரமசிங்க மூவேந்த வேளான்

29. விக்ரமசோழ மூவேந்த வேளான்

30. இராஜராஜேந்திர மூவேந்த வேளான்

31. வீரராஜேந்திர தமிழுதாயரையர்

32. திருநீலகண்ட பட்டர்

33. கொட்டி அதிராத்ரயாஜி

34. காடவராயர்

35. வீரராஜேந்திர முனையதராயர்

36. ஆதித்த சூளாமணி

37. கடாரம்கொண்ட சோழ மூவேந்த வேளான்

38. இரட்டபாடிகொண்ட சோழ மூவேந்த வேளான்

39. ஜநநாத மூவேந்த வேளான்

40. மதுராந்தக மூவேந்த வேளான்

41. இராஜ மூவேந்த வேளான்

42. வீரசோழ மூவேந்த வேளான்

43. இராஜராஜ விஜயபாலர்

44. விக்ரம நாராயண மூவேந்த வேளான்

45. வைகுண்டன்

46. சோழன் விழுப்பரையன்

47. நிருப திவாகர மூவேந்தவேளான்

48. வீரராஜேந்திர கச்சியூர் நாடாழ்வான்

49. பார்த்திவேந்திர பிரும்ம மாராயர்

50. இராஜமாணிக்க மூவேந்த வேளார்

51. மனுகுல சோழ மூவேந்த வேளார்

52. இராஜ வித்யாதர மூவேந்த வேளார்

53. வீரராஜேந்திர மலையப்பிச் சோழர்

54. உதாரவிடங்க மூவேந்த வேளான்

55. மும்முடி சோழ விழுப்பரையர்

56. ஸ்ரீமாதவ பட்டன்

57. சிவதேவ பட்டன்

58. இருங்கண்டி வேங்கடபட்டன்

59. விரிபுரம் நரசிம்ம பட்டன்

60. அத்தாமிபுரம் பட்டன்

61. தானவிநோத மூவேந்த வேளான்

62. பராக்ரம சோழ மூவேந்த வேளான்

63. வில்லவன் மூவேந்த வேளான்

64. இராமதூத வேளான்

65. மாதேவன் பிரும்ம மாராயன்

66. மாதேவன் வெண்காடன்

67. கருணாகரன்

கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்து ஆண்ட இராஜேந்திர சோழனும் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்த அரசர்களும்

1.	முதல் இராஜேந்திரன் (பரகேசரி) கி.பி.	1012–1044	32
2.	இராஜாதிராஜன் (இராஜகேசரி)	1018–1054	36
3.	இரண்டாம் இராஜேந்திரன் (பரகேசரி)	1052–1064	12
4.	இராஜமகேந்திரன் (இராஜகேசரி)	1060–1063	3
5.	வீரராஜேந்திரன் (இராஜகேசரி)	1063–1069	7
6.	அதிராஜேந்திரன் (பரகேசரி)	1067–1070	3
7.	முதல் குலோத்துங்கன்	1070–1125	55
8.	விக்ரம சோழன்	1118–1135	17
9.	இரண்டாம் குலோத்துங்கன்	1133–1150	17
10.	இரண்டாம் இராஜராஜன்	1146–1163	17
11.	இராஜாதி ராஜன் –II	1163–1178	15
12.	மூன்றாம் குலோத்துங்கன்	1178–1218	40
13.	மூன்றாம் இராஜராஜன்	1210–1246	36
14.	மூன்றாம் இராஜேந்திரன்	1240–1279	39

இராஜேந்திரன் காலத்து அறிஞர்கள்

1. சர்வசிவ பண்டிதர்
2. இலகுளீச பண்டிதர்
3. ஈசானசிவ பண்டிதர்
4. நம்பியாண்டர் நம்பி

5. கருவூர்த் தேவர்

6. நம்பிகாட நம்பி

7. நாராயண கவி

8. அமிதசாகரர், குணசாகரர்

9. சதுராநந பண்டிதர்

இராஜேந்திர சோழன் காலத்துப் புகழ் மிகுந்த *சிற்பிகள்(கட்டிட வல்லுநர்கள்)*

1. திருவொற்றியூர் கோயிலைக் கட்டிய இரவி என்னும் வீர சோழப் பெருந்தச்சன்.

2. திருவாலங்காட்டுச் செப்பேட்டை எழுதிய காஞ்சீபுரத்தைச் சேர்ந்த ஓவியக் குலத்துதித்த நால்வர்.

3. காஷ்டகாரி ஆராவமுதப் புருஷோத்தமனான இராஜேந்திர சிம்மப் பேராச்சாரியன்.

4. காஷ்டகாரி கிருஷ்ணரங்கன் திரிபுவன மகாதேவி பேராச்சாரியன்.

கங்கைகொண்ட சோழபுரம் பற்றி குறிக்கும் இலக்கியங்கள்

1. திருவிசைப்பா

   கருவூர்த் வேரால் கங்கைகொண்ட சோழீஸ்வரரைப் போற்றிப் பாடப்பட்ட பதிகங்கள்

2. விக்ரமாங்கதேவ சரித்திரம்

3. கலிங்கத்துப் பரணி

4. மூவருலா

இங்கு விளங்கிய மாளிகைப் பகுதிகளும் மதில்களும்

இராஜேந்திர சோழன் மதில்

குலோத்துங்கச் சோழன் உட்படை வீட்டு மதில்

கங்கைகொண்ட சோழன் மாளிகை

சோழ கேரளன் மாளிகை

ஆதிபூமி (கீழ் நிலை)

கீழை சோபானம்

கீழைத் திருவாசல்

வேம்பு குடி வாசல்

ராஜராஜன் பெருவழி

ராஜேந்திரன் பெருவழி

விளாங்குடையான் பெருவழி

குலோத்துங்க சோழன் திருமதில் பெருவழி

கூழை யானை போன பெரு வழி

மதுராந்தக வடவாறு

கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயில் கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளோர்

1. இராஜேந்திர சோழன் (பூர்வ தேசமும் கங்கையும் கடாரமும் கொண்டருளின அய்யன்)
2. இராஜாதிராஜ சோழன் (கல்யாணபுரமும் கொல்லாபுரமும் கொண்டு ஆனை மேல் துஞ்சின அண்ணல்)
3. வீர ராஜேந்திர சோழன்
4. வானவன் மகாதேவி (இராஜேந்திரனின் தேவி)
5. அம்மங்கா தேவி (இராஜேந்திரனின் அன்பு மகள் குலோத்துங்கனின் தாய்)
6. முதல் குலோத்துங்க சோழன் (1120)
7. மூன்றாம் குலோத்துங்கன் (1200)
8. கன்னோசியைச் சார்ந்த காஹடவால அரசன் சோழர்களின் நண்பன் மதனபாலன்
9. பாண்டியன் ஜடாவர்மன் சுந்தரபாண்டியன் (1252)
10. விக்ரம பாண்டியன் (1257)
11. மாறவர்மன் குலசேகரன் (1272)
12. வைப்பூர் திருவேங்கடமுடையான் ஏகாம்பரநாத காங்கேயன் (1463)
13. விஜயநகரப் பேரரசன் கிருஷ்ணதேவராயன்.

கங்கைகொண்ட சோழபுரம்

தஞ்சையில் பெருங்கோயில் கட்டி சீரும் சிறப்புமாக ஆண்ட முதலாம் இராஜராஜ சோழனின் அருமை மைந்தன், முதலாம் இராஜேந்திர சோழன். வடக்கே கங்கைநதிவரை (தற்கால ஒரிஸ்ஸா, வங்காளம், கல்கத்தா உள்பட) தன் படையை அனுப்பி பெரும் வெற்றிகண்டு கங்கைகொண்ட சோழன் என்று பட்டம் கொண்டு அதன் நினைவாக அவன் நிறுவியது கங்கைகொண்ட சோழபுரம் என்னும் தலைநகர். அங்கு ஓங்கு புகழ் கங்கைகொண்ட சோழீச்சுரம் என்னும் பெருங்கோயில் ஒன்றையும் நிர்மாணித்துள்ளான். கங்கைகொண்ட சோழபுரம் இப்பொழுது திருச்சி மாவட்டம் உடையார்பாளையம் தாலுக்காவில் ஜயங்கொண்டானுக்கு அருகில் உள்ளது. கும்பகோணத்திலிருந்து அணைக்கரை வழியாக அரியலூர் செல்லும் பஸ்கள் இவ்வூர் வழி செல்கின்றன.

முதல் இராஜேந்திர சோழன் தோற்றுவித்த நாளிலிருந்து (1025 முதல்) சுமார் 250 ஆண்டுகள், தென்னாட்டிலேயே ஈடு இணையற்ற தலைநகராகத் திகழ்ந்தது கங்கைகொண்ட சோழபுரம். வடக்கே துங்கபத்திரை ஆற்றங்கரையிலிருந்து தெற்கே ஈழம் முழுவதும், மேற்கே மகோதயபுரம், (மேலைக் கடற்கரை – கொடுங்கோளுர்) முதல் கிழக்கே வங்கக்கடல் கடந்து கடாரம் ஸ்ரீவிஜயம் வரை (இன்றைய மலேசியா, சிங்கப்பூர் கீழைத்தீவுகள்) தனிஒருக்குடைக்கீழ் ஆண்ட ஒப்பரும் நகரம் கங்கைகொண்ட சோழபுரம். இந்திய நாட்டு வரலாற்றிலேயே கடல் கடந்து மாற்றான் நாட்டிலேயே அவனை வென்று திறை கொண்டுவந்து குவித்த வீரமிகு தானைத் தலைவர்கள் இவ்வூரிலிருந்து தான் சென்றனர்.

இராஜேந்திர சோழனின் ஆற்றலுக்கும், புகழுக்கும் ஏற்ப இத்தலைநகரும், கோயிலும் விளங்கின. ஆனால் சோழராட்சியின் இறுதியில் ஏற்பட்ட தளர்வின் காரணமாக இத்தலைநகர் மறைந்து போயிற்று. ஆயினும் இராஜேந்திரனின் திறமையின் சிகரமாக அவன் தோற்றுவித்த கோயில் இன்றும் எஞ்சியுள்ளது.

தமிழ்நாட்டின் தலைநகராக மதுரை, காஞ்சி, தஞ்சை போன்ற நகர்கள் திகழ்ந்தன. ஆனால் எந்த தலைநகரையும் ஆட்சியின் சிறப்பிலே, வெற்றி குவித்த வீரத்திலே இதற்கு ஈடாக குறிக்க முடியுமா எனில் இயலாது எனவே சொல்லலாம். ஆனால் இந்நகர் போல வேறு எந்த தலைநகரும் இருந்த இடமே தெரியாது மண்ணோடு மண்ணாக மறைந்து போனதும் இல்லை. இன்றும் அது இருந்த இடத்துக்குச் சென்றால் இராஜேந்திர சோழன் வாழ்ந்த அத்தலைநகர் எங்கே? தன் ஆட்சி முழுவதும் திசை எங்கும் சென்றும் இறுதிவரை தன் முதிர்ந்த வயதிலும் யானை மீதமர்ந்து போர் முகத்து வெற்றி முழக்கமிட்டு உருவிய வாளுடன் பாய்ந்து வாகை சூடி உயிர் நீத்தானே இராஜாதிராஜன் 'யானை மேல் துஞ்சிய தேவன்' அவன் வாழ்ந்த இடம் எங்கே? சின்னஞ்சிறு வயதில் முடிசூடி சோழர் தம் பெருமையை உலகறியச் செய்தானே குலோத்துங்க சோழன்—ஜயங்கொண்டாரின் கலிங்கப் பரணி கொண்டவன் அவனிருந்த அரண்மனை எங்கே? விக்ரமசோழ இரண்டாம் குலோத்துங்கன் போன்ற பின் வாழ்ந்த சோழர்களும், ஜெயங்கொண்டார், சேக்கிழார், ஒட்டக்கூத்தர் போன்ற புகழ்மிகு புலவர்களும் வாழ்ந்த இடம் எங்கே? கருணாகரத் தொண்டைமான், நரலோகவீரன் போன்ற சேனாதிபதிகள் வாழ்ந்த இடம் எங்கே? எங்கே? என்று கேட்கத்தோன்றும்! ஒரு குடிசை கூட இல்லாத திறந்த வெளியாகத்தான் இந்நகர் இன்று காட்சியளிக்கிறது. நமது குரல் திறந்த வெளியிலே பரவி ஏக்கக் குரலாக எதிரொலிக்கும். அந்த அளவுக்கு இருந்த தடையமே தெரியாது மறைந்து போன ஒரே தலைநகரும் இதுவே.

ஆயினும் இந்த ஊரும், இதன் அருகில் உள்கோட்டை, வீரசோழபுரம் போன்ற ஊர்களின் பெயர்களும் இதன் சிறப்பை நினைவுகூர்பவையாக இருக்கத்தான் செய்கின்றன. இவ்வாண்டு (1980) தமிழ்நாடு அரசு தொல் பொருளாய்வுத் துறை, இங்குள்ள மாளிகைமேட்டை அகழ்வு செய்து சோழ மாளிகையின் பகுதிகளை வெளிக்கொணர்ந்திருக்கிறது. இது இன்னும் விரிவாக்கப்பட இருக்கிறது. இதன் பயனாக இதன் வரலாறும், புகழும் சிறக்கும் என்பதில் ஐயமில்லை.

இராஜேந்திரன்

இராஜராஜ சோழனுக்கு திரிபுவன மாதேவி என்ற பெயர் பெற்ற சேரகுலப் பெண், வானவன் மாதேவியாரின் வயிற்றில் உதித்தவன் முதல் இராஜேந்திர சோழன். அவன் பிறந்த திருநக்ஷத்திரம் திருவாதிரை.

இவன் இளங்கோவாக இருந்தபோதே சுமார் 900,000 வீரர்களுக்கு தலைமை தாங்கி, வடக்கே பீஜாப்பூர் வரையிலும் வெற்றி நடைபோட்டு மேலை சாளுக்கியரை வென்ற புகழாளன். வேங்கியையும், கங்க மண்டலத்தையும் காத்து நின்றவன் இவனே என்றும் கூறுவர். இராஜராஜன் தன் ஆற்றல் மிகுந்த மைந்தனுக்கு கி.பி. 1012-இல் முடி சூட்டினான். தன் தந்தையுடன் இராஜேந்திரன் சுமார் நான்கு ஆண்டுகளாவது சேர்ந்து ஆண்டிருக்க வேண்டும்.

இராஜராசனின் ஆட்சி சிறப்பையும், இராஜேந்திரனின் வீரச் சிறப்பையும் வரலாற்று ஆசிரியர்கள் பலவாறாகவும் புகழ்ந்துள்ளனர். "இராஜேந்திரன் பட்டம் எய்தியபோது, அவரது தந்தை, இராஜராஜன் மிகப்பரந்த சாம்ராஜ்யத்தை நிறுவி தன் மகனிடம் ஒப்பளித்தான். வியக்கத்தகும் வகையில் அரசாங்கம் செயல்பட்டது பல உயர்தர அதிகாரிகள் சீரும் சிறப்புமாக மிகவும் நுண்ணிதாக அரசியல் பணிகளை கண்காணித்தனர். வேளாண்மை, பெரும்சாலைகள், நீர்ப்பாசனம், வரி முதலிய பல துறைகளிலும் தேர்ந்தவர் பலர் பணியாற்றினர். அன்றிருந்த வணிகர்களின் குழுக்களும், ஊர்ச் சபைகள் கைவினைஞர் குழுக்களும், முழு உரிமைகளுடன் செயல்பட வாய்ப்பளிக்கப்பட்டிருந்தன நாட்டில் அமைதி எங்கும் நிலவியது. பலதிறப்பட்ட வீரர் படைகளும் நன்கு தேர்ச்சி பெற்று, வலுவான படைகளாக திகழ்ந்தன. முதல் இராஜேந்திரன் இவையனைத்தையும் மேலும் விரிவாக்கினான். சோழ சாம்ராஜ்யத்தை, என்றும் கண்டிராத அளவுக்கு விரிவாக்கியதோடு ஆசிய நாட்டிலேயே மிகச்சிறந்த இந்து சாம்ராஜ்யமாகத் திகழச் செய்தான்" என்று வரலாற்று வல்லுநர்கள் கூறுவர்.

இராஜேந்திரனின் வெற்றிகள்

இராஜேந்திர சோழன் பரகேசரி என்று பட்டம் பூண்டான். அவன் அடைந்த வெற்றிகளைப் படிப்படியாக அவனது மெய்க்கீர்த்திகள் கூறுகின்றன. "திருமன்னிவளர இரு நில மடந்தையும், போர் செயப்பாவையும் சீர்தனிச் செல்வியும் தன் பெருந்தேவியராகி இன்புற" என்று அவனது மெய்க்கீர்த்திகள் தொடங்குகின்றன. அவன் இடைதுறைநாடு, வனவாசி, கொல்லிப்பாக்கை,

மண்ணைக் கடக்கம் முதலான வெற்றி கொண்டு தெற்கே ஈழ மண்டலம் முழுவதையும் வென்று ஈழத்து அரசனுடைய முடியும், அவன் தேவியர் முடியும் கைப்பற்றினான். இராசேந்திர சோழனுக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னர் பராந்தக சோழன் பாண்டியரை வென்றான். தோற்று ஓடிய பாண்டியன் ஈழத்தில் தஞ்சம் புகுந்தான். தனது மகுடத்தை ஈழத்தில் பதுக்கி வைத்தான். அந்த முடியை இராஜேந்திரன் வென்று கைப்பற்றிக் கொணர்ந்தான். பாண்டியர்கள் பெருமையுடன் தரித்து கொண்டது, 'இந்திரன் ஆரம்' எனப்பட்டது. அதுவும் ஈழத்தில் ஒளித்து வைக்கப்பட்டிருந்தது அதையும் இராஜேந்திரன் கைப்பற்றினார்.

"பொருகடல் ஈழத்தரசர் தம்முடியும்
ஆங்கவர் தேவியர் ஓங்கெழில் முடியும்
முன்னவர் பக்கல் தென்னவன் வைத்த
சுந்தரமுடியும் இந்திரன் ஆரமும்
தெண்டிரை ஈழமண்டல முழுவதும்"

என்று அவன் மெய்க்கீர்த்தி கூறுகிறது.

முதலாம் இராஜேந்திரசோழன் பாண்டி நாட்டை வென்று அங்கு ஒருபெரும் மாளிகை எடுப்பித்து தன்னுடை மகனை பாண்டி நாட்டின் அரசன் ஆக்கினான். அவனுக்கு சோழ பாண்டியன் என்ற பட்டம் அளித்து ஆளவகை செய்தான். சேரநாட்டை வென்று அங்கு பரசுராமன் காலம் தொடங்கி வந்த கேரள முடியைக் கைப்பற்றினான். முயங்கி என்ற இடத்தில் மேலைச் சாளுக்கிய மன்னன் ஜெயசிங்கன் என்பவனை வென்று இரட்டைப்பாடி, ஏழரை இலக்கத்தை கைப்பற்றினான். இதனை "பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட்டு ஒளித்த ஜெயசிங்கன் அளப்பரும் புகழொடு இரட்டிப்பாடி, ஏழரை இலக்கம் கண்டான்" என்று கல்வெட்டு கூறும். சுள்ளி சூழ்ந்த கொல்லிப் பாக்கையை கைப்பற்றினான் என்றும் கல்வெட்டு கூறுகின்றன. பின்னர் கலிங்கப் பகுதியிலேயே பல இடங்களிலே வென்று கங்கை நதி வரையில் வெற்றி கண்டதை அவனது கல்வெட்டுகள்

"விக்கிரம வீரர் சக்கரக் கோட்டமும்
முதிர்பட வல்லை மதுரை மண்டலமும்
காமிடை வளைஇய நாமனைக் கோணமும்
வெஞ்சின வீரர் பஞ்சப் பள்ளியும்

பாசடைப் பழன மாகுணி தேசமும்
அயர்வில் வன்கீர்த்தி ஆதிநகர் அகவையிற்
சந்திரன் தொல்குலத்து இந்திரரதனை
விளையமர்க் களத்துக் கிளையொடும் பிடித்துப்
பலதனத் தொடுநிறை குலதனக் குவையும்
கிட்டருஞ் செறிமிளை ஒட்ட விஷயமும்
பூசுரர் சேருநற் கோசல நாடும்"

என்று கூறுகின்றன,

கங்கை வெற்றி

கங்கை நதி வெற்றி ஒரு மாபெரும் வெற்றியாக, வேறு எந்த தமிழ் மன்னனும் வென்றிராத அளவுக்கு அடைந்த பெரும் வெற்றியாகத் திகழ்ந்தது. அவனது தானைத் தலைவர்கள் கங்கையாற்றிலிருந்து புனித நீரை வெற்றிச் சின்னமாக எடுத்து வந்தனர். வெற்றி வாகையோடு திரும்பிய அந்த வீரர்களை இராஜேந்திர சோழன் தானே கோதாவரி வரையில் சென்று வரவேற்றான். அங்கிருந்து கொண்டு வந்த நீரை கங்கைகொண்ட சோழபுரத்தில் கொண்டு வந்து சோழ கங்கம் என்ற பெரும் ஏரி ஒன்றைத் தோண்டி அதில் ஊற்றி அதனை ஒரு ஜல மயமான வெற்றிச் சின்னமாக ஆக்கினான் என்று வரலாறு கூறும். அவ்வாறு வரும் வழியில் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு அருகில் உள்ள திரைலோகி என்ற ஊரில் உள்ள சிவன் கோயிலில் தங்கத்தால் ஆன தாமரை மலரை சிவபெருமானுக்கு வைத்து வணங்கினான் என்று அறிகிறோம். இந்த கங்கை வெற்றியின் காரணமாக "கங்கை கொண்ட சோழபுரம்" தலைநகராகத் தோன்றியது.

கடல் கடந்த வெற்றி

பின்னர் இராஜேந்திர சோழன் ஆழ்கடல் நடுவில் பல கலங்களைச் செலுத்தி ஸ்ரீவிஜயத்து அரசன் சங்கிராம விஜயோத்துங்கவர்மன் என்பவனை வெற்றி கண்டான். அங்கிருந்து பல நாடுகளையும், நகரங்களையும் கைப்பற்றி அங்கு இருந்த வித்தியாதரதோரணம், தங்கத்தால் ஆன கதவுகளும், அழகிய மணிகள் கோர்த்து செய்யப்பட்ட கதவுகளும் இன்னும் ஏராளமான நிதிக்

குவியல்களும் அவனது கப்பற்படையால் கங்கைகொண்ட சோழபுரத்திற்கு கொண்டுவந்து சேர்க்கச் செய்தான். கடல் கடந்து கடாரத்து அரசனை வென்ற இராஜேந்திரன் திறன், அவனது கப்பற்படையின் வீரம் இந்திய நாட்டில் வேறு எவரும் காணாத ஒரு பெரும் வெற்றியாகும். ஆதலால் அவனை 'கடாரம் கொண்ட சோழன்' என்று கல்வெட்டுகள் புகழ்கின்றன மேலும் 'நிக்கோபார்' என்கின்ற 'நக்க வாரத்தை' வென்று அங்கு புலிக்கொடியை பொறிக்கச் செய்திருக்கிறான். இச்செய்தி பின்வருமாறு

"நித்தில நெடும்கடல் உத்திரலாடமும்
வெறிமலர்த் தீர்த்தத்து எறிபுனல் கங்கையும்
அலைகடல் நடுவுள் பலகலம் செலுத்திச்
சங்கிராம விசையோத் துங்கவர்மன்
ஆகிய கடாரத்து அரசனை வாகையாம்
பொருகடல் கும்பக் கரியொடும் அகப்படுத்து
உரிமையில் பிறக்கிய பருநிதிப் பிறக்கமும்
ஆர்த்து அவன் அகநகர்ப் போர்த் தொழில் வாசலில்
விச்சாதிரத் தோரணமும் மொய்த்து ஒளிர்
புனைமணிப் புதவமும் கனமணிக் கதவமும்
நிறைசீர் விசயமும் துறைநீர்ப் பண்ணையும்
வண்மலை ஊர் எயில் தொன்மலை ஊரும்
ஆழ்கடல் அகழ்சூழ் மாஇரு திங்கமும்
கலங்கா வல்வினை இலங்கா சோகமும்
காப்புறு நிறைபுனல் மாப்பப்பாளமும்
காவலம் புரிசை மேவிலிம்பங்கமும்
விளைப்பந் தூருடை வளைப்பந் தூரும்
கலைத்தக்கோர் புகழ் தலைத் தக்கோலமும்
தீது அமர் பல்வினை மாதமாலிங்கமும்
கலாமுதிர் கடுந்திறல் இலாமுரி தேசமும்
தேனக்கவார்பொழில் மாநக்கவாரமும்

தொடுகடல் காவல் கடுமுரட் கடாரமும்
மாப்பெருந் தண்டால் கொண்ட கோப் பரகேசரிவன்மரான
உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழதேவர்"

அப்பெருமன்னனால் தோற்றுவிக்கப்பட்டது கங்கைகொண்ட சோழபுரம்.

இராசேந்திர சோழனுக்கு கங்கைகொண்ட சோழன், மும்முடிச் சோழன், மதுராந்தகன், உத்தம சோழன், பண்டித சோழன், வீரசோழன், பூர்வதேசமும், கங்கையும் கடாரமும் கொண்ட அய்யன் பரகேசரி என்ற பட்டப் பெயர்கள் உண்டு. "வடதிசை கங்கையும், தென்திசை ஈழமும், குடதிசை மகோதையும் குணதிசை கடாரமும்" அவனது எல்லைகளாக திகழ்ந்தன. அவனுக்கு வானவன் மாதேவி, பஞ்சவன் மாதேவி, முக்கோக்கிழான், வீரமாதேவி என்ற பல தேவியர் இருந்தனர். பெரும் புகழ் மன்னன் வடக்கே காஞ்சிபுரத்துக்கு அருகில் பிரம்மதேசம் என்ற இடத்தில் இறந்தான். அவனது உடல் ஈமத் தீயில் இடப்பட்டது. அப்போது அவனது தேவி வீரமாதேவி என்பவள் தீப்பாய்ந்து உயிர் நீத்தாள். வீரமாதேவியின் அண்ணன், அவர்கள் உயிர் நீத்த இடத்தில் தண்ணீர் பந்தல் ஒன்றை வைத்து அவ்வழி செல்வோர்க்கு நீர் அளிப்பதற்காக வகை செய்தான்.

இராஜாதி இராஜன்:

இராஜேந்திர சோழனுக்கு விஜய இராஜேந்திரன், இராஜேந்திரன், வீர இராஜேந்திரன் என்ற மூன்று மக்கள் இருந்தனர். விஜய இராஜேந்திரன் என்பவனே முதலாம் இராஜாதி இராஜன் என்பவன் ஆகும். அவனை இராஜேந்திர சோழன் கி.பி. 1018–இல் இளங்கோவாக முடி சூட்டினான். கி.பி 1044–இல் இராஜேந்திரன் இறக்கும் வரையில் முதலாம் இராஜாதி இராஜன் தன் தந்தையோடு ஆட்சி செய்தான். பல போர்களிலே வெற்றி பெற்று வீர வாகை சூடிய வீரப் பெரும் மன்னன் முதல் இராஜாதி இராஜ சோழன் ஆவான்.

கங்கைகொண்ட சோழபுரத்தில் முதன்முதலில் முடிசூடப்பட்ட சோழ மன்னன் முதலாம் இராஜாதி இராஜன் ஆகத் தோன்றுகிறது. முதலாம் இராஜாதி இராஜன் தான் அரியணை ஏறிய நாள்தொட்டு இறுதிநாள் வரையில் பல்வேறு இடங்களிலும் போரிட்டு, பெரும் வெற்றி குவித்து இறுதியில் யானை மீது அமர்ந்து, சாளுக்கிய மன்னனோடு போரிட்டுக்

கொண்டிருந்தபோது, இறந்து போனான். ஆதலின் அவன் "கல்யாண புறமும், கொல்லா புறமும், கொண்டு யானை மேல் துஞ்சிய அண்ணல்" என்ற பட்டம் பெற்றான். இந்தப் போரில் நடந்தறியாத நிகழ்ச்சி ஒன்று நடந்தது. இராஜாதி இராஜன் சாளுக்கிய மன்னனோடு போரிட்டுக் கொண்டிருந்த போது சாளுக்கியப் படைகள் இராஜாதி இராஜன் மீது குவிந்து அவனை வீழ்த்தின. தங்களது மன்னன் வீழ்ந்ததைக் கண்டு கலங்கிய சோழர் படை அங்குமிங்குமாகத் திரிந்து புறமுதுகிட்டு ஓடத் தொடங்கின. வீரத்தோடு போர் புரிந்த பெரும் படை கலங்கி பின்னிட்டு ஓடுவதை அதன் பின்னே நின்று கொண்டிருந்த இரண்டாம் இராஜேந்திர சோழன், முதலாம் இராஜாதி இராஜனின் தம்பி "இதோ நான் இருக்கிறேன். முன்னேறுங்கள்!" என்று குரல் கொடுத்து பின்னிட்டு வரும் படையின் நடுவே பாய்ந்து அதன் முன் சென்று சாளுக்கிய வீரர்கள் ஓட போர் புரிந்தான். தோற்றுச் சின்னாபின்னமாக சிதறி ஓட இருந்த படை இரண்டாம் இராஜேந்திரனின் பின் அணி வகுத்து மீண்டும் போரில் பாய்ந்தன. ஒரு வினாடியில் தோற்க இருந்த படை முன்னேறி இராஜேந்திரனின் வீர முழுக்கத்தோடு ஆக்கம் கொண்டு சாளுக்கிய வீரர்களை வீழ்த்தின. அக்கணமே வெற்றி சோழரை அடைந்தது. யாரும் கண்டிராத வெற்றி. ஆதலின் இரண்டாம் இராஜேந்திர சோழன் அந்த வெற்றி பெற்றகளத்திலேயே முடிசூட்டிக்கொண்டான். கங்கைகொண்ட சோழபுரத்தில் சீரும் சிறப்புமாக முடிசூடிக்கொள்ள வேண்டியவன் அதைக் காட்டிலும் அரிதான முடிசூட்டு விழாவை தான் வெற்றி கண்ட போர்க்களத்திலே நடத்திய பெருமகன் ஆவான்.

அவனுக்கு அடுத்து அவனுடைய மகன் ராஜ மகேந்திரன் என்பவன் மிகக் குறுகிய காலம் ஆண்டிருக்கிறான். இரண்டாம் இராஜேந்திரனுக்குப் பின் தோன்றிய வீரஇராஜேந்திரன் சோழப் பேரரசன் ஆக கங்கைகொண்ட சோழபுரத்தில் முடிசூடிக் கொண்டான். சுமார் ஏழு ஆண்டுகள் ஆண்ட வீரராஜேந்திர சோழனின் கல்வெட்டு கங்கைகொண்ட சோழிச்சுரம் கோயிலில் காணப்படுகிறது. முதலில் வீரஇராஜேந்திரன் சாளுக்கிய மன்னனோடு போர் தொடுத்தான். வெற்றியும் கண்டான். ஆயினும் இறுதியில் தன்னுடைய பெண்ணை சாளுக்கிய அரசனுக்கு மணம் செய்து கொடுத்தான். அவனுடைய ஆட்சியின் இறுதி காலத்தில் தன் மகன் அதிராஜேந்திரனுக்கு முடிசூட்டி வைத்தான்.

குலோத்துங்க சோழன்

முதலாம் இராஜேந்திர சோழனுக்கு அம்மங்காதேவி என்ற ஒரு பெண் இருந்தாள். அவளை முதலாம் இராஜேந்திர சோழன் கீழைச் சாளுக்கிய அரசன் ராஜராஜ நரேந்திரனுக்கு மணம் செய்து கொடுத்தான். அம்மங்காதேவி தன் தந்தை நிறுவிய கங்கைகொண்ட சோழபுரத்தில் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறாள். அவளுக்குப் பிறந்த குழந்தைக்கு இராஜேந்திரன் என்ற தன் தந்தையின் பெயரையே சூட்டி மகிழ்ந்தாள். அம்மங்காதேவியின் குழந்தையை இராஜேந்திர சோழனின் தேவி மடியிலே வைத்து கொஞ்சும் போது 'இருகுலமும் சிறக்க வந்த செல்வனே' என்று போற்றியதாக கலிங்கத்துப் பரணி கூறும். அந்தக் குழந்தையை பின்னர் குலோத்துங்கன் என்று முடிசூட்டப்பட்ட பெரும் பேரரசன் ஆகும். குலோத்துங்கன் பிறந்து வளர்ந்து நூல் பல கற்று, போர் முறை கற்றுச் சிறந்த இடம் கங்கைகொண்ட சோழபுரம். ஆதலின் அவன் கீழைச் சாளுக்கிய அரசனுக்குப் பிறந்தவன் ஆயினும் தன் தாயாகிய அம்மங்காதேவியின் இடத்திலேயே வளர்ந்தவன் ஆதலின் சோழனாகவே வளர்ந்தான் சிறு வயதிலேயே சிறப்பும், ஆற்றலும் திறனும் கொண்டவனாக இருந்ததால் வீர ராஜேந்திரனால் முடி சூட்டப் பெற்றான். ஆகவே வடக்கே போர் முனையில் ஈடுபட்டு இருந்தான். அச்சமயத்தில் தான் வீர ராஜேந்திரன் இறந்து போக அதிராஜேந்திரன் அரியணையில் ஏறினான். ஆனால் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்த சேனாதிபதிகள் சாளுக்கிய மன்னனோடு ஏற்பட்ட தொடர்பை வெறுத்து கலகம் புரிந்தனர். ஆதலின் சாளுக்கிய மன்னன் விக்கிரமாதித்தன் என்பவன் பெரும் படை கொண்டு தன் மைத்துனனை காப்பதற்காக கங்கை கொண்ட சோழபுரத்திற்கு வந்தான். வரும் வழியில் சோழர்களின் தானைத் தலைவர்கள் பலரை வெற்றி கண்டான். கங்கைகொண்ட சோழபுரத்துக்கு வந்து அதிராசேந்திரனை அங்கு முடிசூட்டுவித்து இரண்டு மாதம் அங்கு தங்கி இருந்து பின்னர் தன் நாடு திரும்பினான். அவன் திரும்பி தன் தலைநகர் சேரும் முன்னர் மீண்டும் கங்கைகொண்ட சோழபுரத்தில் கலவரம் மூண்டது அக்கலவரத்தில் அதிராஜேந்திரன் கொல்லப்பட்டான். சோழ அரசு உரிய தலைவன் இன்றி தவித்தது அப்பொழுது குலோத்துங்கன் பேரரசனாக முடி சூட்டப்பட்டான். அந்த முடிசூட்டு விழாவை கலிங்கத்துப் பரணி மிகச் சிறப்பாகப் பாடுகிறது. குலோத்துங்க சோழனின் 55 ஆண்டு ஆட்சியால் சிறந்தது கங்கைகொண்ட சோழபுரம். அவன் காலத்தில் கன்னோஜியை

தலைநகராகக் கொண்டு ஆண்ட காஹடவாலர் அரசர்கள் குலோத்துங்கனுடன் நெருங்கிய தொடர்பு கொண்டு இருந்தார்கள். அவ்வரசர்களில் ஒருவன் கங்கைகொண்ட சோழபுரத்தில் இருந்திருக்கிறான். அவனுடைய கல்வெட்டு ஒன்று கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலில் உள்ளது. குலோத்துங்கனுக்குப் பின் வந்த விக்கிரம சோழன் இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன், இரண்டாம் இராஜாதிராஜன், மூன்றாம் குலோத்துங்கன் ஆகிய சோழ மன்னர்கள் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரம் புகழுடன் திகழ்ந்தது.

சோழப் பெருமன்னர்களில் இறுதியாக ஆண்ட சோழப் பெருமன்னன் மூன்றாம் குலோத்துங்கன். அவன் மதுரையும், ஈழமும், கருவூரும், பாண்டியன் முடித்தலையும் கொண்டவன் என்று புகழப்படுகிறான். அவனது ஆட்சியின் இறுதியில் பாண்டிய மன்னன் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழநாட்டை வென்றான். ஆயிரத்தளி என்ற இடத்தில் வீராபிஷேகம் புரிந்து கொண்டான் ஆனால் சுந்தர பாண்டியன் கங்கைகொண்ட சோழபுரத்தை கைப்பற்றினானா என்பது தெளிவாகத் தெரியவில்லை எனினும் இதுவே சோழப் பேரரசு தளர்ச்சி அடையக் காரணமாக இருந்தது.

மூன்றாம் குலோத்துங்கனுக்குப் பிறகு மூன்றாம் இராஜராஜன் அரியணை எறினான். ஆனால் கோப்பெருஞ்சிங்கன் என்ற பல்லவ குறுநில மன்னனால் தோற்கடிக்கப்பட்டான். கைது செய்யப்பட்டான். அவனை போசள மன்னன், கோப்பெருசிங்கன் வாயிலிருந்து மீட்டு மீண்டும் சோழ அரியணையில் அமர்த்தினான். மூன்றாம் இராஜராஜன் கங்கைகொண்ட சோழபுரத்து அரியணையில் மீண்டும் அமர்ந்தான். அவனுக்குப் பின்னர் மூன்றாம் இராஜேந்திர சோழன் என்பவன் பட்டத்துக்கு வந்தான். அவனோடு சோழப் பேரரசு பொலிவிழந்து போயிற்று. கங்கைகொண்ட சோழபுரத்தில் ஜடாவர்ம சுந்தர பாண்டியனுடைய மூன்றாவது ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்று இருக்கிறது. ஜடாவர்ம சுந்தர பாண்டியன் 1251–இல் பட்டம் எய்தியவன் பாண்டிய பேரரசர்களிடையே சிறந்தவனாக திகழ்ந்தவன். அவனது ஆட்சியில் சோழ நாட்டை சிறக்க செய்திருக்கிறான். தொண்டுகள் பெயரால் சுந்தர பாண்டியன் செய்த சந்தி என்ற கங்கைகொண்ட சோழபுர கோயிலிலே ஒரு வழிபாட்டை சிறக்க செய்திருக்கிறான். அவனோடு விக்கிரம பாண்டியன் என்பவனும் சேர்ந்து ஆண்டிருக்கிறான். அவனும்

தொண்டுகள் பெயரால் கங்கைகொண்ட சோழபுரக் கோயிலிலே ராஜாக்கள் நாயகன் சந்தி என்று ஒரு சந்திபூஜை வழிபாட்டிற்காக, குலோத்துங்க சோழநல்லூர், இராஜேந்திர சோழநல்லூர் ஆகிய இரு ஊர்களைக் கொடுத்திருக்கிறான். சுந்தர பாண்டியனுக்கு பின்னர் 1261–இல் மாறவர்மன் குலசேகரன் பட்டத்துக்கு வந்தான். அவன் ஆட்சியின் கீழ் கங்கைகொண்ட சோழபுரம் இருந்தது அவனது ஆட்சியின் இறுதியில்தான் மாலிக்காபூர் படையெடுத்து வந்தான். இந்த கால கட்டத்தில் கங்கைகொண்ட சோழபுரம் வலிமை குறைந்தது.

விஜயநகர அரசின் கீழ்

விஜயநகர பேரரசன் குமாரகம்பணன் என்பவன் 1365–இல் படையெடுத்து இராமேஸ்வரம் வரையில் சென்றான். ஆயினும் கங்கைகொண்ட சோழபுரத்தில் அவனது கல்வெட்டுகள் ஏதும் கிடைக்கவில்லை. கி.பி 1363–ஐ சேர்ந்த ஒரு கல்வெட்டு இங்கு உள்ளது. அதில் திருவேங்கடமுடையான், ஏகாம்பரநாத காங்கேயன் என்பவன் குறிக்கப்படுகிறான். அவன் விஜயநகர அரசில் மல்லிகார்ஜுனனின் கீழ் இருந்திருக்க வேண்டும். அவனுக்குப் பிறகு 1483–இல் ஆண்ட மல்லிகார்ஜுன ராயரின் மகன் பிரவுட விருபாட்சன் என்பவனின் கல்வெட்டு உள்ளது. அதன்பின்னர் விஜயநகர சாம்ராஜ்ய சக்ரவர்த்தி கிருஷ்ண தேவராயர் காலத்தில் கங்கைகொண்ட சோழபுரக் கோயில் புகழுடன் திகழ்ந்திருக்கிறது. சோழமண்டலத்து பல பெருமாள் கோயில்களுக்கும் சிவாலயங்களுக்கும் கிருஷ்ணதேவராயர் ஜோதி, சூலவரி போன்ற இறை வரிகளைத் தானமாகக் கொடுத்தார். அக்கோயில்களின் பெயர்கள் 'தீர்ந்தநகரி' என்ற இடத்துக் கல்வெட்டில் குறிக்கப்படுகிறது. இவ்வாறு கிருஷ்ணதேவராயர் இறைவரி கொடுத்த கோயில்களில் கங்கைகொண்ட சோழபுரமும் ஒன்று.

உடையார் பாளையத்தின் கீழ்

16–ஆம் நூற்றாண்டிலிருந்த கங்கைகொண்ட சோழபுரமும், உடையார் பாளையமும் அரசு காவலர் அல்லது பாளையக்காரர் கீழ் வந்தது. இவர்கள் விஜயநகர பேரரசின் கீழ் ஆண்டவர்கள். வண்டிகள், குதிரைகள், யானைகள், படைவீரர்கள் ஆகியவற்றை அரசர் வேண்டும்போது இவர்கள் கொடுத்து உதவ வேண்டும், அதற்கேற்ப அவர்களின் கீழ் பல பகுதிகள் திகழ்ந்தன. ஆதலின் கங்கை கொண்ட சோழபுரம், உடையார்பாளைய அரசு காவலின் கீழ் வந்தது.

வெளிநாட்டார் ஆட்சியில்

விஜயநகரப் பேரரசு வீழ்ந்தபின் கி.பி. 1756-இல் பிரஞ்சுக்காரர்கள் உடையார் பாளையத்தின் மீது படையெடுத்தார்கள். நாற்பதினாயிரம் ரூபாய் திறை செலுத்த பாளையக்காரர் வற்புறுத்தப்பட்டார்கள். கி.பி.1765-இல் ஆங்கிலேயர்களுடைய உதவியோடு நவாப் இவ்வூரைக் கைப்பற்றினார். இந்தப் போரில் கங்கைகொண்ட சோழபுரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. கோயிலின் புறத்தே உள்ள கோட்டை மதில்கள் இந்த காலத்தில் எடுக்கப்பட்டதாக இருக்கலாம். கி.பி. 1801-இல் கிழக்கிந்திய கம்பெனியாருக்கு திருச்சிராப்பள்ளிச் சீமை கொடுக்கப்பட்டது. அப்போது உடையார்பளையம் ஜமீனுக்கு 1000/- ரூபாய் மானியம் அளித்தார்கள். 1817-இல் ஆங்கிலேய அரசு உடையார்பாளையத்தை பாளையக் காரரிடத்திலே ஒப்படைத்தனர். ஆனால் கங்கைகொண்ட சோழபுரம் ஆங்கிலேயர் ஆட்சியிலேயே வைத்துக் கொள்ளப்பட்டது.

இடித்தனர்

1836-இல் கொள்ளிடம் நதியின் கிழக்கே கோயிலிலிருந்து சுமார் 7 கல் தொலைவில் ஒரு அணை கட்டப்பட்டபோது கோயில் மிகவும் பாதிக்கப்பட்டது. கோயிலில் இருந்த மண்டபத் திருச்சுற்று கற்கள் எல்லாம் பொதுப்பணித்துறையால் அணைக்கரை கட்ட எடுத்துச்செல்லப்பட்டது. இதைப் பற்றிய குறிப்பு ஒன்று 1855-ஆம் ஆண்டின் 'இந்தியன் ஆண்டிக்வரி' என்ற நூலில் காணப்படுகிறது. அதன் பிறகு கங்கைகொண்ட சோழபுரக் கோயில் பொலிவு மங்கி காணப்பட்டது.

மறைந்த மாளிகை

சோழப்பேரரசின் இறுதிக் காலத்திலேயே தலைநகராகத் திகழ்ந்த கங்கை கொண்ட சோழபுர மாளிகைகள், அரண்மனைப் பகுதிகள், கோட்டை கொத்தளங்கள் தரை மட்டமாக இடிக்கப்பட்டிருக்க வேண்டும். படிப்படியாக அங்கு கிடந்த செங்கற் குவியல்களை அந்த இடத்தின் அருகே வாழ்ந்த மக்கள் எடுத்துச் சென்று தங்கள் வீடுகளுக்குப் பயன்படுத்தி இருக்கிறார்கள். சில ஆண்டுகளுக்கு முன்னர் வரையில் இந்த பகுதியில் பூமியைத் தோண்டி செங்கற்களை வண்டி வண்டியாக பெயர்த்து எடுத்துச் சென்று சுற்று

வட்டாரங்களில் வீடுகள் எழுப்பி இருக்கிறார்கள். ஒரு வண்டி செங்கற்களுக்கு விலை 4 அணா தானாம். ஏற்றமிகு எழில் அரண்மனையாக இருந்த இடம் முள்ளும், புதரும் மண்டி, எங்கு பார்த்தாலும் ஒரே சமவெளியாகத் திகழ்ந்தது. ஆங்காங்கே அதிக ஆழம் உழ இயலாமல் இருந்ததால் புஞ்சை நிலம் ஆக இது திகழ்ந்தது.

தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறையின் அகழ்வாராய்ச்சி

அண்மையில் தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை இந்த இடத்தில் அகழ்வாராய்ச்சி மேற்கொண்டு உள்ளது. மாளிகைமேடு என்ற இடத்தை பாதுகாத்து வருகிறது. இங்கு நடக்கும் அகழ்வாராய்ச்சில் மிகப் பரந்த சுவர்ப்பகுதிகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுமார் 7 அடிக்கும் மேலாக அஸ்திவாரம் போடப்பட்டு சுவர்கள் காணப்படுகின்றன. மிகப் பெரிய 5 அடி அகலம் உள்ள இரண்டிரண்டு சுவர்கள் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டு அதன் மேல் தூண்களையும், சுவர்களையும் எழுப்பி அரண்மனையைத் தோற்றுவித்திருக்கிறார்கள் அவற்றின் பகுதிகள் இப்போது கிடைக்கின்றன. அத்துடன் வண்ணம் பூசப்பட்ட சுண்ணக் காரைகளும் கிடைக்கின்றன. அவற்றிலிருந்து மாளிகையின் பல பகுதிகள் அழகிய சித்திரங்கள் தீட்டப்பட்டு திகழ்ந்தன என்பது தெளிவு. சிதைந்து போன பானை ஓடுகளும், சீன தேசத்துப் பானைகளும், சில பகுதிகளில் வெளிப்பட்டு வருகின்றன. மரத்தூண்களும் கதவுகளும் இணைப்பதற்குப் பயன் படுத்தப்படும் இரும்பு ஆணிகளும், பிற பொருட்களும் கிடைத்துள்ளன. பெரிய வாள் ஒன்றின் பிடி ஒன்றும் கிடைத்துள்ளது. அகழ்வாராய்ச்சி மேலும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

மண்ணில் மறைந்த இந்த மாளிளையை கங்கை கொண்ட சோழன் தோற்றுவித்தபோது எவ்வளவு சிறந்ததாகத் திகழ்ந்திருக்க வேண்டும்! இராஜராஜன் காலத்தில் தஞ்சை தலைநகராகத் திகழ்ந்தபோது ஏன் கங்கைகொண்ட சோழபுரத்தை இராஜேந்திர சோழன் தலைநகராக மாற்றினான் என்பதற்கு எவ்வித காரணமும் கூற இயலவில்லை. ஒரு கால் கங்கைக்கரைவரை வெற்றி கண்ட இராஜேந்திர சோழனுக்கு ஊக்கமும், ஆர்வமும் அவன் இந்த இடத்திற்கு வந்தபோது தோன்றி இருக்கலாம். அதன் பயனாக அங்கு தலைநகர் தோன்றியிருக்கக்கூடும். வீரம் விளைந்த பூமி

என்பதால் உறையூரும். பாஞ்சாலங்குறிச்சியும் தலைநகர்களாக அமைக்கப்பட்டன என்று பாண்டிய மரபுகள் கூறும். அதுபோல இராஜேந்திரசோழனின் கங்கை கொண்ட சோழ வெற்றிக்கு முழு உரு கொடுத்த இடமாக இது இருந்திருக்கலாம்.

பராந்தகன் காலத்திலேயே

அன்மையில் இங்கு பராந்தக சோழனுடைய கல்வெட்டு ஒன்றை தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. அதிலிருந்து 10–ஆம் நூற்றாண்டிலேயே இங்கோர் வணிகத்தலம் இருந்தது எனவும், அதற்கும் தஞ்சாவூருக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது எனவும் அறிய முடிகிறது.

கங்கை கொண்ட சோழன் மாளிகை

இங்கு கங்கைகொண்ட சோழபுரம் தோன்றிய போது பெரும் ராஜதானியாக நிர்மாணிக்கப்பட்டு அரண்மனைப் பகுதிகளும் இருந்தன என அறிகிறோம். இரண்டு கோட்டை மதில்களாவது இங்கு இருந்திருக்க வேண்டுமென அறிய முடிகிறது. ஒன்றின் பெயர் "இராஜேந்திரசோழன் மதில்" என்றும் மற்றொன்று "உள்படை வீட்டு மதில்" என்றும் கல்வெட்டு மூலம் அறிகிறோம். வீரராஜேந்திர சோழனுடைய கல்வெட்டில் இங்கிருந்த அரண்மனையின் பெயர் "சோழ கேரளன் திருமாளிகை" ஒன்று இருந்தது என அறிகிறோம். இது இராஜேந்திரனுடைய பட்டங்களில் ஒன்றாக இருக்கலாம். அங்குள்ள கல்வெட்டு அரண்மனையின் ஆதிபூமி, கீழை சோபானம், மாவலி வானாதராஜன் பள்ளிக்கட்டில் போன்ற பகுதிகளை குறிக்கிறது. முதல் குலோத்துங்க சோழனுடைய கல்வெட்டு ஒன்று இங்கிருந்த மாளிகையை கங்கை கொண்ட சோழன் மாளிகை என்று குறிக்கிறது. இங்கு வருவதற்கு இராஜராஜன் பெருவழி என்றும் இராஜேந்திரன் பெருவழி என்றும் இருவழிகள் இருந்தன. அதோடு விளாங்குடையான் பெருவழி, கூழை யானை போன பெருவழி என்ற பாதைகளும் அங்கிருந்தன வேம்புகுடி வாசல் என்ற ஒரு வாயில் இருந்திருக்கிறது. குலோதுங்க சோழன் காலத்தில் மதில் ஒன்றும், கோட்டைச்சுவர் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. அதற்கு 'குலோத்துங்க சோழன் திருமதில்' என்ற பெயர் இருந்தது. அதற்கு வரும் வழியை "குலோத்துங்க சோழன் திருமதில் பெரு வழி" என்று கல்வெட்டு கூறுகிறது.

இதற்கு கிழக்கில் சற்றுத் தொலைவில் ஓடுகின்ற ஆற்றுக்கு, 'மதுராந்தக வடவாறு' என்று பெயர் இருந்தது என அறிகிறோம். இந்த இடத்தைச் சுற்றியுள்ள சில பகுதிகள் வீரசோழபுரம், கொல்லாபுரம், மெய் காவல்புத்தூர், வீரபோகம் ஆகியவை இதன் தொன்மையை இன்றும் எடுத்துக் கூறுகின்றன.

வாணிகம்

கங்கை கொண்ட சோழபுரத்தில் இராஜேந்திரன் காலத்திலேயே "மும் முடி சோழப் பெருந்தெரு" என்றும், "முடி கொண்ட சோழன் மடிகை" என்றும் வாணிகத்தலங்கள் இருந்தன எனக் கல்வெட்டு கூறுகிறது. மூன்றாம் குலோத்துங்க சோழன் கல்வெட்டு ஒன்று "தரணி சிந்தாமணி பெருந்தெரு" என்னும் வாணிகத் தலத்தை கூறுகிறது. ஆதலின் இங்கு வாணிகம் செழித்திருந்தது என்பதும் தெளிவு.

கங்கை கொண்ட சோழீச்சுரம்

இந்த ஊருக்கு அருகில் உள்ள பல குளங்களும் பண்டைய கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

கோயில் : கங்கைகொண்ட சோழீச்சுரம்.

தஞ்சை ராஜராஜீஸ்வரர் கோயிலுக்கு அடுத்து, கங்கை கொண்ட சோழீச்சுவரர் விமானமே தமிழ் நாட்டில் உள்ள விமானங்களில் உயர்ந்து நிற்பதாகும். இக்கோயிலை நெடுஞ்சாலையிலிருந்து வடக்கேயுள்ள வாயில் வழியாக அடையலாம் ஆனால் பண்டு கிழக்கில் ஒரு உயர்ந்த கோபுரமிருந்தது. அது இடிந்து சரிந்து காட்சி அளிக்கிறது. இதுவே முன்னர் கோயிலுக்கு முன்வரும் முக்கிய வழியாகத் திகழ்ந்தது. இப்போது உருவே தெரியாது அழிந்து நிற்கிறது. உள்ளே திருச்சுற்று கிழக்கு மேற்காக நீண்ட சதுர வடிவில் அமைந்துள்ளது. இவ்வமைப்பு தஞ்சைக் கோயிலிலிருந்து மாறுபட்ட அமைப்பாகும். இத்திருச்சுற்று இரண்டு தளங்களை உடையதாக கோயிலைச் சுற்றி மாளிகையாகத் திகழ்ந்தது. இப்போது அதன் ஒரு பகுதியே எஞ்சி உள்ளது. பிராகாரத்தின் நடுவில் ஓங்கி விமானமாக நிற்பது கங்கைகொண்ட சோழீச்சுவரர் கோயிலாகும். அதற்கு முன்னே நீண்டதொரு மண்டபம் காணப்படுகிறது. கங்கைகொண்ட சோழீச்சுரத்தின் வடபுறத்தும், தென்புறத்திலும் சிறு கோயில்கள் உள்ளன. வடபால் உள்ளதை

வடகைலாயம்; தென்பால் உள்ளதை தென்கைலாயம் என்று கூறுவர். இரண்டு கோயில்களும் சோழர் காலத்துக் கோயில்களே.

ஓங்கி உயர்ந்து நிற்கும் கங்கைகொண்ட சோழீச்சுவரர் விமானம் கீழே சதுரமாகவும், அதற்கு மேலே எண்பட்டை உருவிலும், மேல் உச்சியில் வட்ட அமைப்பிலும், அமைக்கப்பட்டு இருக்கிற விமானமாகும். சிவபெருமானின் உருவான சிவலிங்க அமைப்பில் கீழே சதுரமாகவும், இடையில் எண்பட்டை வடிவிலும், மேலே வட்ட வடிவிலும் உள்ளது போல அதன் புறத்தோற்றமாக இந்த விமானம் அமைந்துள்ளது சிறப்பாகும். இந்த சுவரின் கீழ் பகுதியில் பல கோஷ்டங்கள் உள்ளன. அவற்றில் சிவபிரானுடைய பல உருவங்கள் இடம் பெற்றுள்ளன.

தஞ்சைக் கோயிலைத் தோற்றுவித்துச் சிற்பங்களையும் படைத்து அதன் வாயிலாக அனுபவம் முதிர்ந்த சிற்பிகள் செய்து வைத்துள்ளதால் மிகப் பொலிவுடையதாக காணப்படுகின்றன. இங்குள்ள ஒவ்வொரு சிற்பமும் சிறந்த படைப்பு எனில் அது மிகை ஆகாது. ஒவ்வொரு சிற்பத்தின் அங்க அமைப்பும், முகப்பொலிவும், கண்டு கண்டு இன்புறத்தக்கன தென்புறத்தி லிருந்து வலப்புறமாக வந்தோமானால் வரிசையாகக் கீழ்க்கண்ட சிற்பங்கள் உள்ளன.

தெற்கே நடமாடுகின்ற நர்த்தனமாடும் கணபதியின் உருவம் உள்ளது. அதற்கடுத்து உமையொருபாகனின் உருவம் அர்த்தனாரியின் சிலை, அடுத்து காணப்படுவது தக்ஷிணாமூர்த்தியின் சிலை. ஆனால் இப்போது உள்ள தக்ஷிணாமூர்த்தியின் சிற்பம் காலத்தால் பிற்பட்டது. அதன் அருகில் உள்ள முனிவர்களின் சிலையோ கோயிலின் சம காலத்தவை அதனை அடுத்து உள்ளது அரி–அரன் சிற்பம். இது கண்டுகளிக்க தக்கதொன்றாம். அடுத்து தென்சுவரின் மேலைக் கோடியில் உள்ளது ஆடவல்லானின் அற்புத சிற்பம். முகத்தில் புன்முறுவல் தவழ, கையிலே அணல் ஏந்தி ஆனந்ததாண்டவமாடும் அண்ணலின் உருவம் தெய்வத்தின் தன்மையை நம் கண் முன் கொண்டு வந்து நிறுத்தும் தன்மை வாய்ந்ததாகும். ஆனந்தக்கூத்தனின் அருகில் உமை அன்னை, நந்தியின் அருகில் நின்று கொண்டு, தாண்டவத்தைக் கண்டு லயித்து நிற்கிறாள். அண்ணலின் அருகில் காளியின் ஆடலையும் காண்கிறோம். மறுபால் குடமுழா வாசிக்கும் நந்திகேச்வரனையும்

காணலாம். ஆடுகின்ற பெருமானின் காலடியில் கணங்கள் ஆடுகின்றன. இங்கு ஒரு அற்புத உருவைக் காணலாம். எலும்பும் தோலுமாய், ஆனால் பக்தியே உருவாக, காரைக்கால் அம்மை, தாளம் போடுகின்ற காட்சி. இது மிகவும் அரியகாட்சி. தஞ்சாவூர்க் கோயிலிலும், இதே இடத்தில் நடராஜப் பெருமானின் உருவம் இருக்கிறது. ஆனால் அதன் கீழ் காரைக்கால் அம்மையாரின் உருவம் இல்லை. இங்கு கங்கைகொண்ட சோழபுரத்தில் ஆடுகின்ற அண்ணலின் தூக்கிய திருவடியின் கீழ் அம்மை அமர்ந்து உள்ளது குறிப்பிடத்தக்கது.

காரைக்கால் அம்மையாரின் வரலாறு உள்ளம் உருக்கும் வரலாறு. தன் ஊண், உடலை நீத்து பேயாகி அண்ணலைக் காண அவர் சென்றபோது 'அம்மையே' என்று சிவபெருமானே அழைக்கும் பேறு பெற்றாள். அந்தப் புனிதவதியின் வரலாற்றை சேக்கிழார் அழகாக எழுதியுள்ளார். அதில் கயிலையங்கிரியில் அண்ணலைக் கண்டபோது காரைக்கால் அம்மையார்,

இறவாத இன்ப அன்புவேண்டி பின்னும் வேண்டுகின்றார்
"பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னடியை
மறவாமை வேண்டும் மகிழ்ந்துபாடி இன்னும் வேண்டும் நான்
இறைவா நீ ஆடும்போது உன்னடியின் கீழிருக்க" என்றார்.

என்று சேக்கிழார் கூறுகிறார். ஆம் இறைவன் ஆடுகின்றபோது அம்மை அவர் திருப்பாத கமலத்து அடியின் கீழிருக்க வேண்டும் என்று கூறுவது எவ்வளவு பொருத்தம். இங்கு ஒரு சிறப்பு உண்டு. கங்கைகொண்ட சோழீச்சுரத்தை இராஜேந்திர சோழன் சுமார் கி.பி 1050–இல் எடுப்பித்தான். சேக்கிழார் அதற்கு சுமார் 100 ஆண்டுகளுக்கும் பின்னர் தோன்றியவர். ஆயினும் சோழரவையில் அமைச்சராய்ப் பணிபுரிந்தவர். அதாவது கங்கைகொண்ட சோழபுரத்து சோழர் அவையில் பணிபுரிந்தவர். அவர் கங்கைகொண்ட சோழபுரத்துக் கோயிலை பல முறை கண்டிருப்பார் அப்போது இங்குள்ள ஆனந்தகூத்தனும் அவரது அடியின் கீழிருக்கும் அம்மையும், அவர் மனதைக் கொள்ளை கொண்டிருக்க வேண்டும். ஆதலின் பாட்டு, "இறைவா நீ ஆடும்போது அடியின் கீழிருக்க" என்றது இந்த சிற்பத்தைத்தான் என்றால் மிகையல்ல.

மேற்குப்புற சுவரில் கங்காதரர், இலிங்கோத்பவர், மகாவிஷ்ணு, சுப்ரமணியர், விஷ்ணு அனுக்ரக மூர்த்தி ஆகிய சிற்பங்கள் உள்ளன. வட சுவரில் காலாந்தகர், துர்க்கை, பிரும்மா, பைரவர், காமதகனர் ஆகிய உருவங்கள் உள்ளன. பிரும்மாவின் உருவம் தாடியுடனும் மூன்று தலைகள்

தெரியும் வகையிலும் உள்ளது. அவரது மேல் கரங்களில் யாகத்துக்குப் பயன்படும் ச்ருச், ச்ரவம் என்னும் மரத்தாலான கலங்கள் உள்ளன. அவருக்கு இரண்டு தேவியர் காணப்படுகின்றனர், ஒரு தேவி சரஸ்வதியாகும் மற்றவள் சாவித்திரி தேவியாகும். இது ஒரு அரிய காட்சி இச்சுவரின் கிழக்குக் கோடியில் உள்ள காமாந்தகர் சிலை மிகவும் பெருமிதமான அமைப்புடையது சிவபெருமானும், அவர் சுட்டிக்காட்டும் கையும், போற்றத்தகும் வனப்புடையவை.

